# அப்பாவின் சிநேகிதர் சிறுகதைத் தொகுப்பு காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

வே. புளோரா பவுலின் மேரி
தமிழ்த்துறை, ஜெ.அ.ம.கல்லூரி, பெரியகுளம்.

**முன்னுரை:**

எந்த ஒரு இலக்கியமாக இருந்தாலும் அது தோன்றிய காலத்தை சுட்டிக்காட்டுவதாகவே அமையும். சார்ந்து வாழ்ந்த மக்கள் சமூக அமைப்பில் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வாழக்கூடிய மக்கள், தங்களுக்கென பல்வேறு பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், பல்வேறு பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், சமய விழாக்கள், வழிபாடுகள், திருமண முறைகள், உணவு, உடை, உறைவிடம், என சில வரன்முறைகளை வகுத்துக் கொண்டு வாழ்வதே வாழ்வியல் சிந்தனைகளாக அமைகிறது. இக்கட்டுரையில் அப்பாவின் சிநேகிதர் என்ற சிறுகதைத் தொகுப்பில் காணக்கூடிய வாழ்வியல் கூறுகளில் சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

**வாழ்வியல் கூறுகள்:**

இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் 'அசோக மித்திரன்'-'அப்பாவின் சிநேகிதர்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு 1996இல் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. அத்தொகுப்பில் வரக்கூடிய வாழ்வியல் சிந்தனைகளாக

1. இரக்கம்
2. வரதட்சணை
3. கல்வி
4. சாதி

என்ற தலைப்புகளில் பின்வருமாறு விரிவாகக் காண்போம்.

**1.இரக்கம்:**

மனிதனை மனிதனோடும், பிற உயிர்களோடும் பிணைத்து வைப்பது இரக்க பண்பே ஆகும். பிறருக்கு ஏற்படும் துன்பம் தனக்கு நிகழ்ந்தது போல துடிப்பது, மனம் வருந்துவது இரக்கமாகும். இரக்கம் பற்றி வள்ளுவர்

"அறிவினான் ஆகுவது துண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை"
(குறள்:315)

பிறருடைய துன்பத்தைத் தன் துன்பம் போல் எண்ணிப் போற்றாவிட்டால் ஒருவன் பெற்றுள்ள அறிவினால் என்ன பயனும் இல்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இத்தகைய இரக்கம் பற்றி 'புதிர்' என்ற சிறுகதையில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு இளைஞன் க.ஃ.பே வாசலில் நின்று வெளியில் வருபவர்களிடம் இரு கையையும் நீட்டிப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். எங்கிருந்தோ வந்த ஒருவன் இளைஞனை அடித்து வா வீட்டுக்கு என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தான். இந்நிகழ்வு மறுபடியும், மறுபடியும் நடந்தது. ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது. அவர்களையெல்லாம் தள்ளிவிட்டு ஒரு கீரைக்காரி முன்னே வந்து நின்றாள் . இப்போது மாறி மாறி இளைஞனுக்கு அடி விழுந்தது. கீரைக்காரி குறுக்கே புகுந்தாள். 'ஏன் பாவம் அந்தப் புள்ளையைப் போட்டு அடிக்கறே? அதுவே சாவறாப்பல இருக்கு என்றால்"

இக்கதையின் மூலம் எவ்வளவோ மக்கள் அங்கு நின்றாலும் அவர்களுக்கு இளைஞன் மேல் ஏற்படாத இரக்கம் கீரைக்காரிக்கு ஏற்பட்டதை ஆசிரியர் இங்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**2. வரதட்சணை:**

சமுதாயத்தில் வரதட்சணை பெரும் பிரச்சனையாகக் கருதப்பட்டு வருகிறது. வரதட்சணையால் பல்வேறு பெண்களின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகவே இருக்கின்றன. சில பெண்கள் முதிர்கன்னிகளாகவே இருக்கும் நிலை உள்ளது. இத்தகைய வரதட்சணையை பற்றி இரா.பிரேமா பெண் விடுதலையும் பெண்ணுரிமையும் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை வருகிறதென்றால் ஜாதகப் பொருத்தம் கூட அவசியம் இல்லாமல் போய் விடுகிறது. ஜாதகம் சரியில்லையே என்று சொன்னால் அதற்கு அவர்கள் 'ஜாதகமாவது கீதகமாவது மணப்பெருத்தம் சரியாக இருந்தால் போதும்' என்று சொல்லி விடுகிறார்கள் என்கிறார். மேலும் சுபத்ரா என்பவர் 'எந்தன் தோழா'என்ற நூலில் வரதட்சணைப் பற்றிக் கூறும் போது

"வரதட்சணைக் கறைபட்ட
உன் கைகளால்
நீ எடுக்கும் கயிறு கூட
எனக்குக் கறுப்பாய்தான் தெரியும்"

என்று கூறியுள்ளார்.

இத்தகைய வரதட்சணைப் பற்றி 'விழா மாலைப் போதில்' என்ற சிறுகதையில் "இங்கிருக்கும் ஒரு தூணுக்குச் செலவழித்திருக்கும் பணம் அன்று எங்களிடம் இருந்திருந்தால் தங்கை சீதாவின் கல்யாணம் நடந்திருக்கும். கையில் பணம் அதிகமில்லை என்ற உணர்வே சம்பந்தம் பேச நாங்கள் துணிந்த இடங்களின் இதர அம்சங்களை நிர்ணயித்தது. அந்த அம்சங்கள் தயக்கமும், பயமும் ஏற்படுத்துபவை. அதனால் இன்னும் அதிக சிக்கல் ஏற்படுத்தும் சந்தர்பங்களுக்கு உட்பட்டு கடைசியில் பெண் கல்யாணம் நடக்கவில்லை" என்று வரதட்சணையால் ஒரு பெண்ணின் வாழ்வே கேள்விகுறியாகி விட்டதை ஆசிரியர் இங்கு குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

3. கல்வி:

ஒரு நாட்டின் சமுதாய பொருளாதாரப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது கல்வி. இதனை திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார். ஆணவம் அழிந்து, கர்மவினைகள் நீங்கி, மாயை மறந்தால் மனம் ஒளிபெறும். அந்த மனமே இறைவனைச் சென்றடையும். மனித உடலாய் அவதரித்த என்னுள் தடையின்றி இறைவன் குடிபுகுந்தான். பிறருக்கு சொல்ல முடியாத பேரின்ப வீட்டை அடைந்தேன் என்பதை

"குறிப்பறிந்தேன் உடல் உயிரது கூடிச்
செறிப்பறிந்தேன் மிகு தேவர் பிரானை"

என்று திருமூலர் குறிப்பிடுகிறார் ஒருவன் தன் ஆணவம், மாயை கா்ம வினைகள் மறக்க கல்வி கற்க வேண்டும். அத்தகைய கல்வி பற்றி 'இன்ஸ்பெக்டர் செண்பகராமன்' என்ற கதையில் குறிப்பிடுகிறார். "காந்திமதி வகுப்பில் இரண்டாம் ஆண்டு படிப்பது மிகுந்த வருத்தத்தை உண்டு பண்ணியது. அவனுக்குக் கணக்குப் புரியாது. தமிழில் தடுமாறுவான். இங்கிலீஷ் என்றால் தொண்டையடைத்து விடும். உழைக்கமாட்டான் என்றில்லை. ஆனால் அவனுக்கு பள்ளிப்படிப்பு ஏறவில்லை" என்ற இச்செய்தியின் மூலம் படிப்புவராத குழந்தையும் கல்வியின் சிறப்பை உணர்ந்து படிக்க முயர்சிப்பதை ஆசிரியர் இங்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

4.சாதி:

சாதி என்பது இன்று மக்களிடையே பரவிக் கிடக்கும் ஒரு தொற்றுநோயாக காட்சியளிக்கிறது. இதனால் சமுதாயத்தில் பல பிரச்சனைகள், கொலைகள் எனப் பெருகிக் கொண்டே செல்கிறது. இத்தகைய ஜாதியை ஒழிக்க பாரதியார்

'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று தம் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சாதி பற்றி 'இன்று நிம்மதியாக தூங்க வேண்டும்' என்ற கதையில் சாதி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். "சகுந்தலா என்பவள் இராஜரத்தினத்தை காதலிக்கிறாள். ஒரு நாள் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொல்கின்றனர். அதற்கு அவன் சாதிவிட்டு சாதி கல்யாணம் பண்ணினா எங்க வீட்டுல ஏத்துக்கிற மாட்டாங்க என்கிறான். அதற்கு அவள் எங்க வீட்டுல மட்டும் ஒத்துக்கிடுவாங்களா?" என்று வினவுகிறாள். இக்கதையின் மூலம் சாதியின் தாக்கம் இன்றும் சமுதாயத்தில் இருப்பதை இங்கு விளக்கி கூறுகிறார்.

முடிவுரை:

மேற்கூறிய இரக்கம், வரதட்சனை, கல்வி, சாதி என்ற தலைப்புகளின் மூலம் 'அப்பாவின் சிநேகிதர்' என்ற சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் அசோகமித்திரன் கூறிய வாழ்வியல் கூறுகள் சிலவற்றைக் கண்டோம். இதன் மூலம் இரக்கம் ஒரு மனிதனுக்குத் தேவை என்பதையும், வரதட்சணையால் பெண்ணின் நிலை பற்றியும், கல்வியின் முக்கியம் பற்றியும், சாதி சமுதாயத்தில் எப்படி பரவி கிடக்கிறது என்பது பற்றியும் இங்கு நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

◆◆◆

# "சூடிய பூ சூடற்க" என்னும் சிறுகதைத் தொகுப்பில் வாழ்வியல் சிந்தனைகள்

**வே. புளோரா பவுலின் மேரி**
*தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.*

## 1. முன்னுரை

உலகில் மனிதன் தோன்றிய நாளிலிருந்தே கதை சொல்லும் வழக்கமும் தோன்றி வளர்ந்தது. இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னரே குடும்ப விழாக்களில் கதை சொல்லும் வழக்கம் இருந்தது. மேனாட்டு மொழிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சிறுகதை இலக்கியம் தமிழில் இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. எதையும் எதார்த்த நோக்கில் இயற்கையோடு இயைந்து நோக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சிறுகதை இலக்கியம் தோற்றம் பெற்றது. அந்த நோக்கமே சிறுகதை வளர்ச்சியை மேலும் வலுப்பெறச் செய்தது. சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாஞ்சில் நாடனின் "சூடிய பூ சூடற்க" சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் கூறியுள்ள வாழ்வியல் சிந்தனைகளை விரிவாகக் காண்போம்.

வாழ்க்கை என்பது ஒரு கலை. அதை அழகுபடுத்துவதும் அலங்கோலப்படுத்துவதும் அவரவர் கையில் தான் உள்ளது. மனிதனின் பழக்க வழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள், அறக்கருத்துக்கள், இன்பியல் செய்திகள், துன்பியல் செய்திகள் அனைத்தும் அவன் வாழ்வைப் பாதிக்கின்றன. அவர்கள் வாழும் நிலத்திற்கேற்பவும், காலத்திற்கேற்பவும் வாழ்க்கை முறையும் மாறுகிறது. இதன் அடிப்படையில் **"சூடிய பூ சூடற்க"** என்ற சிறுதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் சிந்தனைகளை இனங்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## 2. "சூடிய பூ சூடற்க"வில் வாழ்வியல் சிந்தனைகள்

"சூடிய பூ சூடற்க" என்ற சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் நாஞ்சில் நாடன் அவர்கள் குறிப்பிட்டுள்ள வாழ்வியல் சிந்தனைகளில் ஒரு சில மட்டும் இங்கு ஆராயப்படுகின்றன.

1. ஒற்றுமை உணர்வு
2. வறுமை
3. தன்னம்பிக்கை
4. நன்றியுணர்வு
5. நிலையாமை

போன்றவை பற்றி ஆசிரியர் நம் நூலில் கையாண்டுள்ள விதத்தினைக் காண்போம்.





### 2.1. ஒற்றுமை உணர்வு

சாதி, இனம், சமயம், மொழி, மதம் ஆகியவற்றின் காரணமாக நாட்டில் பல பூசல்கள் உண்டாகின்றன. இதனால் மனிதம் மாண்பிழந்து போகிறது. இதனைக் களைய வேண்டும். இந்த நிலையினை மாற்ற வேண்டும் என்றெண்ணிய பாரதியார் இளைய சமுதாயத்தை ஒற்றுமையுள்ளவர்களாக உருவாக்கினால் தான் நாடு உயர்வடையும் என்ற நோக்கோடு அவர்கள் மனதில் பதியும் படி

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"[1]

என்கிறார். இக்கவிதை வரிகள் குழந்தைகள் மனதில் பசுமரத்தாணி போல ஒற்றுமை உணர்வை பதியச் செய்கின்றன எனலாம்.

மேலும்

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி"[2] என்ற பாரதியின் பாடல் வரிகள் நம் பாரத மக்களை இன்னும் அதிகமாக ஒற்றுமையுடன் வாழ வழிசெய்து கொண்டிருக்கிறது. இதை உறுதிப்படுத்தும் விதமாக "சூடிய பூ சூடற்க" என்ற சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் 'நாஞ்சில் நாடன்' அவர்கள் கொங்கு தேர் வாழ்க்கை என்னும் சிறுகதையில் நகர்ப்புறத்து மக்களிடையே காணப்படும் ஒற்றுமை உணர்வினை தம் கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார். "நம் வாழ்வில் காணா, சமத்துவம் உலாவும் இடங்கள் லைன் வீடுகள். லைனில் மலையாளி, தெலுங்கா, கன்னடர் இவர்களுக்குள் கிறித்துவர்,இஸ்லாமியர் சர்வ ஜாதி இந்துக்கள் இருப்பார்கள். வீட்டு உரிமையாளர் கொங்கு வேளாளக் கவுண்டர், நாயக்கர், தேவர், தென்னாட்டு நாடார். ஆனாலும் மத இனப்பாகுபாடுகள் அறியப்படுவதில்லை"[3]. இப்படி பல சமய மக்களும், பல ஜாதி மக்களும் மத இனப்பாகுபாடுகள் இன்றி அனைவரும் ஒற்றுமையுணர்வோடு உடன் பிறந்தவர்களைப் போல வாழ்கின்றனர் என்று ஆசிரியர் தம் கதையில் ஒற்றுமையுணர்வை வெளிப்படுத்திக் கூறியுள்ளார். மனம் இருந்தால் எல்லா மதத்தாரும், எல்லா இனத்தாரும் சமாதானத்துடன் ஒரே இடத்தில் வாழ முடியும் என்பதை இக்கதையின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். பொருளாதார வர்க்க பேதம் முன்பு பிறபேதங்கள் பின்னுக்குத் தள்ளப்படும் என்பதும் இதனால் புலனாகிறது.

### 2.2. வறுமை

'கொடிது கொடிது வறுமை கொடியது' என்னும் வாக்கிற்கு ஏற்ப வறுமை என்பது ஒரு மனிதனைக் கொல்லும் நோய். வறுமையின் காரணமாக சமுதாயத்தில் நிகழும் குற்றங்கள் ஏராளம். வறுமையானது சிறுவர் முதல் பெரியவர் வரை

குற்றங்கள் செய்யத் தூண்டுகிறது. மிகுந்த செல்வம் உடைய ஒருவனும் கூட தன் செல்வத்தை இழந்து வறுமை நிலைக்கு தள்ளப்படும் போது அவன் சுயமரியாதையை இழந்து உயிரை இழக்கும் நிலை ஏற்படும். இத்தகைய கொடிய வறுமையைப் பற்றி ம.இராமலிங்கம் கூறும் போது "வறுமை தனிமனிதப் பிரச்சனை அன்று அது ஒரு சமூகப் பிரச்சினை"[4] என்கிறார். வறுமை பற்றி மணிமேகலையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்தக் கல்விப் பெரும்புணை விடுஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி"[5]

என்று வறுமையின் கொடுமை பற்றி சித்தரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கொடிய வறுமை பற்றி ஆசிரியர் தம் சிறுகதைத் தொகுப்பில் "யாம் உண்பேம்" என்னும் சிறுகதையில் வறட்சியின் கொடூரம் பற்றியும், அதனால் ஏற்பட்ட வறுமையின் காரணமாக ஒருவரை பசி என்னும் கொடுமை எந்த அளவிற்கு கொண்டு செல்கிறது என்பதைப் பற்றியும் ஆசிரியர் இங்கு குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். கான்பத் சக்காராம் நாத்ரேயின் மனைவியும் மகன் பாகோஜி கன்பத் நாத்ரேவும் இறந்து விட்டனர். அங்கு பஞ்சம் தலை விரித்து ஆடியது. "புஞ்சைக் காடுகள் எல்லாம் சுக்காம் பாறை போலக் கெட்டிப்பட்டு வறண்டு, வெடித்து, வாய் பிளந்து கிடந்தன. ஆனலாய் கொளுத்திய வெயில் மனித, மிருக உடம்புகளில் இருந்த மிச்ச ஈரத்தையும் உறிஞ்சிக்கொண்டிருந்தன. காய்ந்து வறண்ட எண்ணெய்ப் பற்றற்ற மனித தோல்கள் உப்புப் பூத்துப் பொரிந்து சொரசொரத்துக் கிடந்தன. குடிக்கத் தண்ணீரும் கரம்பப் புற்களும் அற்ற கால்நடைகள் உலர் திராட்சை போல் தோல் சுருங்க ஆரம்பித்தது"[6]. வறட்சியின் காரணமாக நாத்ரே ஊரை விட்டு செல்ல முடிவு செய்து இரயில் ஏறினார். இரயிலில் விற்பனை பிரதிநிதியாகிய 'பாபு ராவ்' என்பவர் இரயிலில் பயணம் செய்தார். அவர் பசியினால் தான் வைத்திருந்த ரொட்டியை பிரித்து சாப்பிட ஆரம்பித்தார். "கால் துண்டு ரொட்டியும் கொஞ்சம் சப்ஜியும் இலையில் மீதம் இருந்தன. ஒரு துண்டு ரொட்டியை சப்ஜியுடன் விரல்கள் கவ்விப் பிடித்திருந்தன. வாய்க்குக் கொண்டு போகும் நேரம் பாபுராவின் உயர்த்தியக் கையை, முதிய, தோல் சுருங்கிய நாத்ரேயின் கை எட்டிப் பிடித்து வெட வெடத்தது. குலைந்து ஒலித்த குரலால் அதிர்வுற்று பாபுராவ் நிமிர்ந்து பார்த்தான். 'அமி காணார்... அமி காணார்...' எனக்கு தா என்றல்ல, 'நான் தின்பேன்' என்றல்ல, நாம் உண்போம் என. தூய சங்கத் தமிழில் மொழி பெயர்த்தால் 'யாம் உண்பேம்' என. கண்கள் கசிந்திருந்தன. பிடித்த





கரம் நடுங்கியது. மீண்டும் மீண்டும் பதற்றம் பரவ 'அமி காணார்... அமி காணார்...' நாத்ரேயின் குரல் மிச்ச வாழ்க்கைக்குமான மந்திரம் போல, 'யாம் உண்பேம்' என்ற குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது"[7] பசி பற்றிய காலங்காலமான சித்திரம் நாஞ்சில் நாடனால் மீண்டும் இங்கு மெய்பிக்கப்பட்டுள்ளது.

### 2.3. தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை தான் ஒரு மனிதனின் மிகப்பெரிய ஆயுதம். தன்னம்பிக்கை மனிதருள் தலைவனாக்கும். தன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்வில் தோற்பதில்லை. ஒரு செயலில் அசைக்க முடியாத தன்னம்பிக்கை கொண்டால் வலிமையான சிகரத்தையும் தகர்த்து விடலாம். இதையே வள்ளுவரும் பின்வருமாறு கூறியுள்ளார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."[8]

என்பது தமிழ் மறை. எண்ணியதை எண்ணியவாறே செய்து முடித்தால் அவர் நன்மையாக எண்ணியதை எண்ணியபடியே அடைவர் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். "கதை எழுதுவான் கதை" என்னும் சிறுகதையில் கும்பமுனியின் தன்னம்பிக்கையைப் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாளர் கும்பமுனி இவர் தனக்கு வந்த கடிதங்களை பிரித்துப் படித்தார். தீபாவளி மலருக்குக் கதை கேட்டு கடிதம். 1000 சொற்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றிருந்தது. அடுத்த கடித உறையையும் பிரித்தார். அதுவும் கதை கேட்கும் கடிதம் தான். யோசித்த படி அமர்ந்திருந்தார். தவசிப் பிள்ளை காலாணிப் புற்றுக்காலைத் தாங்கித் தாங்கி நடந்து வந்தார். அவரிடம் தீபாவளி மலருக்கு ரெண்டு வேறு கதை கேட்டிருக்காம்வே! ஒண்ணும் தோணமாட்டாங்குடா! ஊருப்பாடு என்னாம் இருந்தாச் சொல்லு... எழுதி விட்டிருவோம்..."[9] என்றார். தவசிப் பிள்ளையும் எதை எதையோ கூற அது சரிவரவில்லை. கும்பமுனி தன்னம்பிக்கையோடு யோசித்தார். ஒரு கதையை கண்டுபிடித்து எழுத தொடங்கினார். "உலகெல்லாம்" என அடியெடித்து தனது எண்பத்தோராவது கதையை எழுத ஆரம்பித்தார்."[10] தொய்வும் தயக்கமும் தவிர்த்து தன்னம்பிக்கை இருந்தால் ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம் என்பதை ஆசிரியர் இக்கதையில் உணர்த்துகிறார்.

### 2.4. நன்றியுணர்வு

பிறர் செய்த நன்மையை மறவாது வாழும் வாழ்க்கையே நன்றியறிதலில் இன்றியமையாதது. ஒவ்வொருவருக்கும் நன்றியுணர்வு மிக முக்கியம் இதை வள்ளுவர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"[11].

என்கிறார். வேறு எந்த அறத்தை அழித்தவரும் தப்பிபபிழைக்க வழி உண்டு. செய் நன்மையை மறந்தவருக்குத் தப்பிப் பிழைக்க வழியே இல்லை என்கிறார். நன்றி பற்றி வெ.இறையன்பு அவர்கள் குறிப்பிடும் போது “நன்றி சொல்வது என்பது சொற்களால் தான் என்றல்ல நெகிழ்ந்த ஒரு பார்வையால், கனிவு கசியும் கண்களால், ஈரம் நிறைந்த இதயத்தால், திருப்தி தெரிவிக்கும் முக பாவனையால் ஆயிரம் நன்றிகளை பேசாமலேயே சொல்ல முடியும்”[12] என்கிறார்.

ஆசிரியர் நாஞ்சில் நாடன் அவர்கள் “சூடிய பூ சூடற்க” என்ற சிறுகதையில் ஏழைகளின் நலனுக்காக வாழ்ந்து இறந்து போன தியாகியின் செயலினை எண்ணி அவருக்கு நன்றி கூறும் உணர்வினை சித்தரித்துக் காட்டியுள்ளார். “பூமிநாதன் என்பவர் அரசு அலுவலகத்தில் கடைநிலை ஊழியன். கொடியேற்றத்திற்கு பூ வாங்கச் சென்றான். செல்லும் போது என்.ஜி. ராமசாமி சிலைபீடத்தின் ஓரம் எழுபது வயதிற்கும் மேற்பட்ட ஒருவர் நின்றிருந்தார். பூமிநாதன் அப்பா மில் தொழிலாளி என்பதால் என்.ஜி.ஆர். பற்றிக் கதை கதையாகச் சொல்லியிருக்கிறார். என்.ஜி.ஆர். தொழிற்சங்கம் தொடங்கியதற்காக கொலை செய்யப்பட்டார். மருத்துவமனையில் உயிருக்கு போராடிய போது பிரிட்டிஷ் போலீசார் குத்தியவர் யார் என்று கேட்ட போது குத்தியவர் தெரிந்தும் காட்டிக் கொடுக்காத காந்தியவாதி. என் ஜி.ஆர் செல்வாக்கான மில் முதலாளி குலத்தில் பிறந்து தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வைக்கப் போராடி உயிர் துறந்தார். இவருடைய கோஷம் ‘தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்’ என்பதுதான். தொழிலாளிகளுக்காகப் போராடி 1942-ல் உயிர் துறந்தவர். இவரது அடக்க ஊர்வலத்தில் நகரம் குலுங்கியது போன்ற பல செய்திகளை தன் தந்தை கூறியதன் மூலம் அறிந்திருந்தான். அவருடைய செயல்களை நினைத்த பெரியவர் நன்றியுணர்வோடு “கைகளை யாசிப்பது போலும், யாதோ யோக முத்திரைப் போலும் மலர்த்தி விரித்து, கண்களை மூடி, சூரியனைப் பார்த்து காலை வெயில் முகத்தில் மஞ்சளாய் சொரிய பெரியவர் பாடிக்கொண்டிருந்தார்.கண்கள் கசிந்து வடிந்ததை சூரியக் கதிர்கள் ஒற்றியொற்றி எடுத்துக்கொண்டிருந்தன”[13] என்று ஆசிரியர் என்.ஜி.ஆர். அவர்கள் செய்த நன்மைகளை போராட்டங்களை நினைத்து பெரியவர் தொழிலாளர் வாழ்க்கையை மேன்மைப்படுத்தியமைக்கு நன்றியுணர்வேடு நெகிழ்ந்து பாடுகிறார். இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால் அத்தகு தியாகங்களும் தொடரும் என்ற நாஞ்சில் நாடனின் பொறுப்புணர்வு இதில் புலனாகிறது.

### 2.5. நிலையாமை

உலகில் எதுவும் நிலையானது அல்ல. அழகு, செல்வம், இளமை ஏன் பெரிதாக மதிக்கக் கூடிய உயிர் கூட நிலையானது அல்ல. இதை நாலடியார் நமக்கு உணர்த்துகிறது.



JAC JOURNAL OF SCIENCE, HUMANITIES AND MANAGEMENT

“அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனில் செல்வமொன்
றுண்டாக வைக்கற் பாற்றன்று.”[14]

இவ்வுலகில் கல்வி தவிர வேறு எதுவும் நிலையானது என்று கூற முடியாது என்பதை உணர முடிகிறது.

இச்செய்தியை மெய்ப்பிக்கும் விதமாக தம் சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர், “பழிகரப்பு அங்கதம்” என்னும் சிறுகதையில் நிலையாமையின் தன்மையினை வெளிப்படுத்தியுள்ளார்.

பஞ்சலிங்கமங்கலம் பாவநாசம் இசையுலகின் சக்ரவர்த்தியாக இருப்பவர். பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர். இவரின் நண்பனான நேமிநாதன் மாணவர்களின் வேண்டுகோளுக்காக பஞ்சத்தினை ஒரு மணி நேரம் கச்சேரி செய்யச் சொன்னார். பஞ்சம் தான் கேட்ட பணத்தினை மாணவர்களால் தரமுடியாத நிலையில் கச்சேரிக்கு ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார். மறுநாள் சென்னைக்கு சென்ற பஞ்சலிங்கம் விபத்தில் சிக்கினார். “நள்ளிரவு பன்னிரண்டரை மணிக்கு க.க.சாவடி தாண்டி மதுக்கரைக்கு சற்று முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரெய்லர் லாரி ஒன்றின் கீழே அதிவேகமாக வந்த கான்டசா புக முயற்சி செய்ததில் பஞ்சம் தலையுடைந்து தலத்திலேயே குருதிப்பெருக்கில் கிடந்தார். தப்பிய சாரதி பாக்கியநாதன், தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்து நகரின் பிரதான மருத்துவமனை செல்லும் முன் காலம் காத்து நிற்காமல் நகர்ந்து போய்விட்டது.”[15] இச்செய்தியின் மூலம் நிலையானது என்று நினைக்கும் பணம், காலம், உயிர் எதுவும் நிலைத்து நமக்காகக் காத்திருக்காது என்பதை ஆசிரியர் இக்கதையில் காட்டுகிறார். புணத்தை முதன்மைப் படுத்துவதும் கௌரவமாக கருதுவதும் காலத்தின் முன் மனிதனைச் துச்சமாக்கும் என்ற பேருண்மையை இதனால் புலப்படுததுகிறார்.

### 2.6. முடிவுரை

மனித வாழ்க்கை என்பது பிறப்பு, குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என்ற படிநிலைகளைக் கொண்டு அமைவதாகும். மானிட வாழ்க்கையானது என்றுமே பிறரது துணையை நாடி நிற்கும் என்பது உண்மையின் வெளிப்பாடாகும். ஆகவே அவன் தன்னை சமுதாயச் சூழலோடு பிணைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறான். இச்சமுதாயத்தில் வாழ்வியல் தொடர்பான சிந்தனைகள் பல இருந்தாலும் அதில் ஒற்றுமையுணர்வு, வறுமை, தன்னம்பிக்கை, நன்றியுணர்வு, நிலையாமை போன்ற முக்கிய அம்சங்களை மட்டும் சுட்டிக்காட்டி இக்கட்டுரை அமைந்துள்ளது. ஆசிரியர் கூறியுள்ள ஒற்றுமையுணர்வு, நன்றியுணர்வு, தன்னம்பிக்கை ஆகியவற்றை பின்பற்றி வாழும்போதுதான் மனிதன் தன் வாழ்வில் முழுமை அடைகிறான்.

## 3. அடிக்குறிப்புகள்

[1] பாரதியார் பாரதியார் கவிதைகள் பக்.249.

[2] மேலது பாரதியார் கவிதைகள பக்.125.

[3] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க, பக்.13.

[4] மா.இராமலிங்கம், 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் பக்.55.

[5] மணிமேகலை புலியூர் கேசிகன் பாத்திரம் பெற்ற காதை பா.எண்.9.

[6] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.30.

[7] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.36.

[8] திருவள்ளுவர் திருக்குறள் குறள்.666.

[9] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக். 42-43.

[10] மேலது பக். 45.

[11] திருவள்ளுவர் திருக்குறள், குறள்.110.

[12] வெ.இறையன்பு ஓடும் நதியின் ஓசை பக்.147.

[13] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.96.

[14] து.அரங்கன்(உரை) நாலடியார் பக்.13.

[15] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க, பக்.142.

## 4. துணைநூற்பட்டியல்

[1] நாஞ்சில் நாடன் - சூடிய பூ சூடற்க பாவை பிரிண்டர்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு - ஜனவரி-2011.

[2] அரங்க சுப்பையா - இலக்கியத்திறனாய்வு பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதிப்பு - 2007.

[3] இராமலிங்கம், மா., - இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

[4] இறையன்பு, வெ., - ஓடும் நதியின் ஓசை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை - 600 098. நான்காம் பதிப்பு, ஆகஸ்ட் - 2009.

[5] திருவள்ளுவர் - திருக்குறள் சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை, இரண்டாம்

[6] பதிப்பு, நவம்பர் 2004.

[7] புலியூர்க் கேசிகன் - மணிமேகலை பாரி நிலையம், சென்னை. மறுபதிப்பு -2009

[8] பாரதியார் - பாரதியார் கவிதைகள் மணிவாசகர் பதிப்பகம் சென்னை, செம்பதிப்பு – 1997.